திண்டுக்கல் நகரில் மின் விநியோகத்தைத முறைப் படுத்துதல்

*வினா எண் 873—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் மிக அதிகமான மின் தடை அடிக்கடி ஏற்படுவதற்கான விசேட காரணமென்ன ?

(ஆ) இந்த நிலைமையை மாற்றி மின் விநியோகத்தை முறைப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திண்டுக்கல் நகரத்துக்கு இரண்டு வெவ்வேறு கம்பித் தொடர் வழியாக மின்சாரம் பெறப்படுகிறது. ஆயினும் மின்னூட்டிகளில் ஏற்பட்ட மின்சுமை குறைப்பின் காரணமாக திண்டுக்கல் பகுதி உள்பட தமிழ்நாடு எங்கிலும் மின்சார அளிப்பதில் தடை ஏற்பட்டு வந்துள்ளது.

(ஆ) 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் முதல் மின்சார விநியோகத்தில் மேலும் கூடுதல் மின்வெட்டை அரசு அமுல்படுத்தியுள்ளபடியால் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட கால அட்டவணைப்படி மின்சுமை குறைப்பு செய்யப்படுகிறது. இந்த கூடுதல் கட்டுப்பாடுகளை அனுசரிப்பதினாலும், அனல் மின் நிலையங்களின் உற்பத்தி அளவைப் பெருக்குவதின் வாயிலாகவும் மின் விநியோகம் தற்போது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள மின்சார நெருக்கடியிலே அரசு விதித்திருக்கிற அந்தக் கட்டுப்பாடுகளை எந்த அளவிற்கு எடுக்க முடியுமோ அந்த அளவிற்கு எடுத்து, முழுவதுமே மேற்கொண்டு மின்வெட்டு இல்லாமல் தடுத்துவிடலாம் அல்லவா? அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் எங்கள் முயற்சி.